International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிறுபாணாற்றுப்படையில் பெண்களின் சமூகப் பங்களிப்பு

**முனைவர் சு. சீனிவாசன்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கிய ஆற்றுப்படைநூல்களில் ஐந்திணை மக்களின் வாழ்வியல் முறைகள், மன்னர்களின் வீர, வெற்றிச்சிறப்பு, நாட்டு வளம், கலைஞர்களின் வாழ்வியல், வழி வருணணை ஆகியவை பேசப்பட்டுள்ளது. அவ்வகையில் சிறுபாணாற்றுப்படை பேசப்படும் மகளிர் இச்சமுதாய முன்றேத்திற்கு எவ்வகையில் உதவி புரிந்துள்ளனர் என்பதை எடுத்துரைப்பது இவ்ஆய்வுக்கட்டுரையின் நோக்கம்.

**முதன்மைச் சொற்கள்:** சீறியாழ் - சிறிய யாழ், அலவன் - நண்டு, முனிவு இகந்து – வழி வருத்தம், விறலியர் - ஆடலிலும் பாடலிலும் சிறந்து விளங்கும் பெண்கள்

**முன்னுரை**

சங்க இலக்கியப் பத்துப்பாட்டு நூல்களில் செம்பாதியாக அமைந்திருப்பது ஆற்றுப்படை நூல்கள். இவ்வாற்றுப்படை நூல்களுள் ஒன்று சிறுபாணாற்றுப்படை. இந்நூலினை 269 அடிகள் கொண்டு அமைத்துள்ளார் நத்தத்தனார். சிறுபாணன் ஒருவன் தாம் எதிர்பட்ட மற்றொரு சிறுபாணனை விளித்து நான் இன்னின்ன வழியில் சென்று இன்னின்ன விருந்தோம்பல் பெற்று இன்னின்ன பரிசிலை நல்லியக்கோடன் என்னும் மன்னனிடம் பெற்று வந்தேன். அது போல நீயும் பெற்று வருவாயாக என்று ஆற்றுப்படுத்தும் சுயநலமில்லாத பண்பு இந்நூலின் பாடுபொருள். இவ்வாற்றுப்படையில் நல்லியக்கோடனின் சிறப்புகளாக அவனது வீரம், புகழ், செங்கோல் ஆட்சி, நாட்டுவளம் ஆகியவையும் பாணர், பாடினி வாழ்வியல், குடிமக்களின் வாழ்வியலும் பேசப்பட்டுள்ளன. இவ்வகையில் சங்ககால இலக்கியங்களில் பெண்கள் கல்வி; கற்றவர்களாகவும், தொழில், வணிகத்தில் ஈடுபட்டவர் களாகவும் விளங்கி சமுதாய முன்னேற்றத்திற்குப் பங்காற்றியுள்ளனர். அம்முன்னேற்றத்திற்கு எவ்வெவ் வகைகளில் பங்காற்றியுள்ளனர் என்பதை சிறுபாணாற்றுப்படை வழி ஆராய்வது இவ்ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வுக்கட்டுரை பின்வருமாறு பகுத்துக்கொள்ளப்படுகிறது.

1. கலை வளர்ச்சிக்கு வித்திட்ட பாடினி
2. உப்பு வாணிகத்திற்கு ஏற்றம் புரிந்த உமணப்பெண்
3. கிணைமகளின் இல்லற மாண்பு

4. விருந்தோம்பல் பண்பை வளர்த்த திணை மகளிர்

**கலை வளர்ச்சிக்கு வித்திட்ட பாடினி**

பாடினி என்பவள் பாணர்குடிப் பெண்டிர் ஆவர். பாடியின் குலப்பெயரை "அகவன் மகள், ஆடன்மகள், கிணைமகள், கூத்தியர், பாடினி, பாட்டி, பாணிச்சி, மதங்கி, விறலி எனப்படுவதாகும். இப்பெயர்களின் திரிபாக வழங்கப்படுவாரும் பாணர் குடிப் பெண்டிராவர். அழைத்துப்பாடல், ஆடல், கிணைகொட்டல், தாளமிடல், வேடமிட்டாடல், மெய்ப்பாடு தோன்ற நடம் பிடித்தல் முதலிய செயல் வகைகளால் இவர்க்குப் பெயர்கள் பலவாயினும் குடிவழியால் ஒரு வகையரே"[1] என்று இளங்குமரனார் கூறுகிறார். மேலும் அவர் பாடினியின் பெயர்க்காரணத்தைப் "பாணன் என்னும் ஆண்பாலொடு பெரிதும் இடம்பெறும் பெண்பாற் பாடினி என்பதே : பாட்டியர் என்பதும் அரிதாக வழங்குகிறது. விறலி என்பதும் பாணரொடு இணைத்து வரும் பெயரே கூத்தரொடு இணைத்து வருவதும் உண்டு. அக்கூத்தரே பாணர்"[2] என்று விளக்குகிறார்.

ஆற்றுப்படுத்தும் சிறுபாணன் எதிர்ப்பட்ட சிறுபாணனை விளிக்கும் பொழுது, வெப்பம் மிகுந்த மணற்பரப்பிலே நடந்து, மேலும் வெப்பமேற்றப்பட்ட கூரிய பரல்களும் கால்களைக் கிழித்து வருத்த, முதுவேனில் பருவத்தே பாலையயாகிய நீண்ட வழியிடத்தே கடப்ப மரத்தின் வழிநிழலில் தங்கி கூந்தலினையும், மயில் போன்ற சாயலினையும், ஓடி இளைத்து (சாஅய்) வருந்துகின்ற நாயினது நாக்கினையுடைய அடியினையும், பெண் யானையினது பெரிய கையைப் போலத் பருத்து திரண்டு ஒருங்கே இணைந்த தொடைகளையும், வாழைப் பூவினை ஒத்து பொலிவு பெற்ற பனிச்னையி னையும், வேங்கை மரத்தினது நாட்காலத்து மலர் போன்ற சுணங்குகளையும், அணிகலன் களிடத்தே கிடக்கின்ற விருப்பம் தருகின்ற முலையினையும், நுங்கின் இனிய நீரினை ஒத்த ஊறலையுடைய பற்களையும், முல்லை சூடுதற்கமைந்த கற்புடைமையையும், மெல்லிய இயல்பினையும், மடப்பத்தினையும், மான் போலும் பார்வையினையும், ஒளியுடைத்தா கிய நுதலினையும் உடைய விறலியர் நடந்திளைத்து ஓய்ந்த அடியினைக் கல்வி நிரம்பாத இளைஞர் மெத்தென வருடி நிற்கின்றனர் என்று விளிக்கின்றான். இதனை,

**"மணிமலைப் பணைத்தோள் மாநில**
**மடந்தை**
…………**கல்லா இளையர் மெல்லத்**
**தைவரப்"** (சிறுபாண். 1-33)

என்ற அடிகளால் அறியமுடிகிறது.

மேலும் சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி பாணனாகிய மகன் இயக்கும் முறை அறிந்து இயக்கி பரிசில் தருவாரை விரும்பி, தன்னை வெறுத்தன்மிக்க வருத்தத்தோடே கூடின, வறுமை நின்னைக் கொண்டு போகை யாலே, வழி வருத்தம் தீர்ந்திருந்த அறிவு வளர்தற்குரிய தொழிலையுடைய இரவலனே! என்று விளிப்பதனை,

**"பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்**

**இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ,**

……….**முனிவு இகந்து இருந்த, முதுவாய்**
**இரவல"** (சிறுபாண்.34-40)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

மேற்கண்ட கருத்தின் வழி பாடினி வெயிலிலும், பரல்கள் கால்களைக் கிழித்தும், வரி நிழலில் தங்கியும் சிறுபாணனுடன் சென்று தம் கலைத்திறனை வெளிப்படுத்தி இச்சமூகத்திற்கு இசை, நடனம் என்னும் கலையைக் கொடுத்துப் பங்காற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தன் கூட்டத்துடன் முழுவதும் கல்லாத பெண் மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளனர் என்ற குறிப்பும் இங்கே பெறப்படுகிறது. அவர்கள் தான் தம் குருவின் (விறலியரின்) கால்களை மெல்லத் தடவிக்கொடுக்கின்றனர்.

பாணர்கள் ஒரு தனிக்குடியாக இருந்ததனால் அவர்களிடம் இசையினைத் தனியே பயிற்று விக்கின்ற முறைகள் இருந்திருக்க முடியாது. பாணர் குடியின் இளையவர்கள் தமது குடியினருக்குப் பணியாளாக இருந்து உதவுவதன் மூலம் இசைப்பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். இதனை கே.பழனி வேலு, "பாணர்களின் கலையான பாடுதல், அபிநயத்தல், உணர்ச்சியுடன் பேசுதல் ஆகியவை முதியவர்களிடமிருந்து வாய்வழி யாக கற்கப்பெற்றன. இத்தகு கற்றலின் உட்கூறுகளான விதிமுறை, உட்கருத்து, மரபுவழி, உள்ளடக்கம் போன்றவை

நினைவூட்டும் வழியாக விளங்கின. இவை பாணராலும் அவையினராலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப் பெற்றன. இப்படிப்பட்டச் சூழ்நிலையில் கல்வி என்ற ஒன்று இக்காலக் கட்டத்தில் இல்லாமலிருந்தது வியப்பளிப்ப தன்று"[3] என்று கைலாசபதி இயற்றிய பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூலில் கூறுவதாகத் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட கருத்தின்வழி சிறுபாணர்களுடன் விறலியும் தமது வறுமைச் சூழலில் தாம் கற்றுக்கொண்ட கலையினை மேம்படுத்துவ தற்கும் வளர்ச்சியடைவதற்கும் துணை புரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டுத்தொகையில் பெண்கலைஞர்களுக்கு விறலியாற்றுப்படை என்ற தனி துறை இருந்தது. ஆனால் பத்துப்பாட்டு ஆற்றுப் படைகளில் பெண்களுக்கெனத் தனி இலக்கியம் தோன்றவில்லை. பத்துப்பாட்டு தோன்றிய காலத்தில் பெண் என்பவள் ஆணைச் சார்ந்து அதாவது அவனோடு சேர்ந்து வாழக்கூடிய நிலையை அடைந்தாள் என்று கருத இடமுண்டு.

சங்ககாலத்தில் இசை மற்றும் நடனக் கலைகள் உயர்ந்த நிலையில் இருந்ததற்குச் சான்றாக பாடினி விளங்கியதையும், பெண் கள் தொழில்முறை கலைஞர்களாக சமூகத்தில் அங்கீகாரம் பெற்றிருந்தனர் என்பதையும் அரசர்கள் கலைஞர்களைப் போற்றி ஆதரித்த பண்பாட்டுச் சூழலையும் அறிய முடிகிறது. கலை, இலக்கியம், அரசியல் மற்றும் சமூக வாழ்க்கை ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருந்த சங்ககால பண்பாட்டை பாடினியின் உருவாக்கம் பிரதிபலிக்கிறது.

### உப்பு வாணிகத்திற்கு ஏற்றம் புரிந்த உமணப்பெண்

உப்பு விற்கும் உமணப்பெண் வண்டி ஓட்டிக் கொண்டு உமணரோடு வாணிகம் செய்திருக்கிறாள். பாண்டியனது நாட்டினை வருணிக்கும்பொழுது உப்பு வாணிகத்தியர் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. உப்பு வாணிகர் வண்டியோடே வந்த அவர்தம் மக்களை ஒத்த மந்தி வாள்போலும் வாளையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிலே எயிற்றை ஒத்த முத்துக்களைப் பெய்து மூடி, நுசுப்பையும் தோள்புற மறைக்கும் ஐம்பாலையும் உடைய உப்பு வாணிகத்தியர் ஈன்ற பிள்ளைகளோடே கூடிக் கிலுகிலுப்பை யாகக் கொண்டு விளையாடுகின்ற கடற்கரைப் பட்டினமாகிய கொற்கைக்கு வேந்தனும் என்பதை,

**"நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த**
**முகாஅர் அன்ன மந்தி மடவோர்**
**நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்**
**வாள்வாய் எருத்தின் வயிற்றகத் தடக்கித்**
**தோள்புறம் மறைக்கு நல்கூர் நுசுப்பின்**
**ஊளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற**
**கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்**
**தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்"**
(55-62)

என்ற அடிகள்வழி அறியலாம். இக்கருத்தின் வழி உமணப்பெண் தம் இணையரோடும் இணைந்து உப்புவணிகம் புரிந்த செய்தியை அறிய முடிகிறது. மேலும் தம் பிள்ளைகளை யும் சுமை என்று பாராமல் தம் கூட்டத்தோடு வண்டி ஓட்டியும் உப்பு வாணிகம் செய்தும் இச்சமூக பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றியமையைக் காண முடிகிறது. மேலும்,

உமணப்பெண் வீட்டிற்குள் மட்டுமே இருந்தவர் அல்ல பொருளாதார உற்பத்தியில் பங்காற்றிய உழைக்கும் பெண். குடும்பத்தின் வருமானத்தை உயர்த்துவதில் அவருக்குச் சமமான பங்கு இருந்திருக்கிறது. பயணம், வணிகம், குடும்ப மேலாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைத்த திறமையான பெண்ணாகவும் இருந்திருக்கிறாள் என்பது நோக்கத்தக்கது. அதே வேளையில் குடும்பப்பொறுப்பு மற்றும் தொழில் பொறுப்பு ஆகிய இரண்டையும் சுமந்த பெண்ணாக விளங்கியிருக்கிறாள்.

### கிணைமகளின் இல்லற மாண்பு

ஆற்றுப்படுத்தும் பாணன் தாங்களும் முன்னாளில் வறுமையுற்றிருநத்தாகவும் நல்லியக்கோடனைக் கண்ட பின்னர் அவனது வள்ளல் தன்மையால் வளமான தாகவும் குறிப்பிடுமிடத்துத் கிணைமகளின் இல்லற மாண்பு பேசப்படுகிறது. தாய் தான் அண்மையில் ஈன்ற குட்டிகள் பாலினை உண்ணுதலைத் தன் பசியின் மிகுதியால் பொறுக்கவியலாமல் குரைக்கின்ற புன்மையி னையுடைய அத்துடன் கூரையிலிருந்து

இற்று சுவர்மீது வீழ்ந்து கிடக்கும் கழிகள் அச்சுவரில் தோன்றிய கரையான் அரித்துச் சேர்த்த புழுதியிடத்துக் காளான் பூத்துக் கிடக்கும் அட்டில் இத்தகைய வறுமைச் சூழலில், எங்களின் வயிற்றுப் பசியினைப் போக்க இளைத்த உடலையுடைய கிணை மகள் குப்பையில் நின்ற வேளைக்கீரையைக் கிள்ளி வந்து உப்பில்லாமல் வேகவைத்து, பார்ப்போர் பழிப்பர் என்று நாணிக் கதவடைத்து எம் சுற்றத்தோடு பகிர்ந்து உண்டோம் (140-150) என்று குறிப்பிடுகிறான்.

மேற்கண்ட கருத்தின் வழி கிணைமகள் வறுமையிலும் அறம் தவறாது கிடைத்தப் பொருட்களைக் கொண்டு உணவு சமைத்து அதைப் பகிர்ந்து உண்ணும் பண்பையும் இச்சமூகத்திற்குத் தந்துள்ள முறையைக் காணமுடிகிறது. இற்றைக்காலத்திலும் பெண்கள் தங்களது வறுமை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்கின்ற பொருளைக் கொண்டு இல்லறம் நடத்தும் பாங்கினை ஆங்காங்கே காண்பது குறிப்பிடத்தக்கது.

**விருந்தோம்பல் பண்பை வளர்த்த திணை மகளிர்**

சங்க கால மக்களின் வாழ்வியலில் விருந்தோம்பல் பண்பு இன்றிமையாத ஒன்றாக அமைந்திருக்கிறது. சிறுபாணன் பாட்டுடைத்தலைவனின் நாட்டிற்குச் செல்லும் வழிகளைக் கூறும்பொழுது ஆங்கே வாழக் கூடிய மக்கள் பாணர்களுக்கு விருந்தோம்பிய செய்தி இடம்பெறுகிறது.

**எயிற்பட்டின நுளைமகள் தரும் உணவு**

நீவிர் நெய்தல் நிலத்தின் வழியே உப்பங் கழிகள் சூழ்ந்த ஊர்களையுடைய எயிற் பட்டினத்தை அடைந்தால், அங்கு அகில்மர விறகாலே தீயினை எரித்துப் பெருந்தோளையும், மதிமுகத்தையும், வேல் நோகக்கையுமுடைய நுளைமகள் காய்ச்சிய தேறலைப் பரதவர் நுமக்கு ஊட்ட, நீயிரும் மகிழ்ந்து நல்லியக்கோடனைப்பாடி, குழலோசையின் தாளத்திற்கேற்ப ஆடிய நும் விறலியரோடு உலர்ந்த குழல்மீனைச் சுட்டதனோடே மனைதொறும் பெற்று உண்டு மகிழ்வீர் என்று எயிற்பட்டின நெய்தல் நில மக்கள் தரும் உணவினைப் பற்றி ஆற்றுப்படுத்தும் பாணன் எடுத்துரைக்கிறான். இதனை,

**“பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்**
**ஓங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன**
**வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்**
**கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்**
**மதியேக் கறூஉம் மாசறு திருமுகத்து**
**நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த**
**பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்**
**மளலைர்இப் படப்பைக் கிடங்கிற் கோமான்**
**தளையவிழ் தெரியல் தகையோற் பாடி**
**அறற்குழற் பாணி தூங்கி அவரொடு**
**வறற்குழற் சூட்டின் வயின்வயின் பெறுகுவிர்”**
(சிறுபாண்.153 – 163)

என்ற அடிகள் வழி அறிய முடிகிறது.

**எயினக் குலப்பெண் தரும் உணவு**

வேலாலே வெற்றி பெற்ற வேலூரினை நீ அடைவீராயின், அங்கு உனக்கு வெப்பமிக்க குடிலின்கண் உறையும் எயினக் குலப்பெண் சமைத்த இனிய புளியங்கறியிட்ட சோற்றினை, தேமாவின் தளிர்போலும் மேனியையும் சிலவாகிய வளையினையும் உடைய நும் மகளிருடைய திரளுடனே, ஆமானினது சூட்டிறைச்சியோடே நும்பசி தணியுமாறு நிரம்பப் பெறுகுவீர் என்று முல்லை நில மக்கள் தரும் உணவு குறித்த செய்தியினை ஆற்றுப்படுத்தும் பாணன் எடுத்துரைக்கிறான். இதனை,

**“விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்**
**உருவெயிற் குலைஇய உருப்பவீர் குரம்பை**
**எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை யாயமொடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்”**
(சிறுபாண். 173–177)

என்ற அடிகள் எடுத்துரைப்பதைக் காண முடிகிறது. மேலும் பாணரோடு வரும் திரளான பெண்கள் என்று கூறுவது குறிப்பிடத் தக்கது. பாணரோடு பெண்கள் பெருந் திரளாகச் சென்று தம் கலைத்திறனை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது.

**உழத்தியர் தரும் உணவு**

ஆமூரை அடைவீராயின், அங்கு உரனுடைய எருதுகளை உடைய உழவுருடைய தங்கை மகள் தம் மக்களாலே நும்மை முறையாகத்

தடுத்து, நெல்லைக் குற்றிய அரிசியாலாக்கிய வெள்ளிய சோற்றை நண்டும், பீர்க்கங்காயும் கலந்த கலவையுடன் தருவதை நீயிர் பெறுகுவீர் என்றும் ஆற்றுப்படுத்தும் பாணன் ஆற்றுப்படுத்தப்படும் கூறுவதாக அமைகிறது. இதனை,

"...**ஆமூர் எய்தின்**

**வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்**

**உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை**

**பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறபுறத்துத்**

**தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப**

**இருங்காழ் உலக்கை இரும்புமுகந் தேய்த்த**

**அவைப்புமாண் அரிசி அமலைவெண் சோறு**

**கவைத்தாள் அலவன் கலவையொடு**

**பெறுகுவிர்"** (சிறுபாண்.188–195)

என்ற அடிகள் வழி உணரமுடிகிறது. உழவர் மகளிரின் விருந்தோம்பல் நயம் குறித்து இளங்குமரனார், "உழவர் மகளிர் பாணர் முதலியவர்களை விருந்தோம்பும் நயம் சிறப்புடையது. உலகங்காக்கும் உழுவுத் தொழிலில் ஈடுபட்ட அம்மகளிர் தனித்தனியே தாய் நிலையில் இருந்து தம் மக்களுக்கு உண்பிப்பார் போல உண்பிக்கும் அருமையை இச்சிறுப்பாணாற்றுப்படை ஒளிப் பூட்டிடக் காட்டுகின்றது"[4] என்று சிறப்பிக்கி றார்.

இந்நுலில் பேசப்பட்ட நெய்தல், முல்லை, மருதம் ஆகிய நிலங்களில் வாழும் பெண்கள் வழிச்செல்லும் பாணர்களைத் தங்கள் விருந்தினர்கள் போல் தடுத்து அவர்களுக்கு உணவு தந்து போற்றி இச்சமூக நல்லிணத்திற்கு வழிகோலியுள்ளனர். இன்றளவும் தமிழர்களின் பண்பாடுகளுள் விருந்தோம்பல் முதன்மைப் பண்பாக விளங்குவதைக் காண முடிகிறது.

நாகரிக உலகில் இப்பண்பு வணிக ரீதியாக சிறிது வேறுபட்டாலும் அதே பண்புடன் விளங்குகிறது. இன்றைய உணவு விடுதிக ளுக்குச் செல்லும் பொழுது வருக என அழைத்து தண்ணீர் கொடுத்து உணவு பரிமாறும் பண்பு இருப்பதைக் காண முடிகிறது.

**முடிவுகள்**

பாடினி சிறுபாணனுடன் வெப்பமேறிய மணற்பரப்பு, கால்களைக் கிழிக்கும் கற்கள், வரிநிழல் ஆகிய துன்பம் தரும் சூழல்களைக் கடந்து மன்னர்களிடத்தில் தம் இசைத்திறனை வெளிப்படுத்தி இச்சமூகத்திற்கு இன்று நாம் விரும்பும் இசைக்கலையைக் கொடுத்துப் பங்காற்றியுள்ள செய்தியைக் காண முடிகிறது.

உப்பு வாணிகத்தியர் தம் உமணரோடு சென்று உப்பு விற்று இச்சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ள நிலையை உணர முடிகிறது.

வறுமையிலும் அறநெறி தவறாது கிடைத்த குப்பைக்கீரையை உப்பில்லாமல் சமைத்து அதைப் பகிர்ந்து உண்ணும் பண்பை இச்சமூகத்திற்குக் கொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

வழிச்செல்லும் பாணர்களைத் தம் விருந்தினர் போல் உபசரித்து உணவு தந்து போற்றிய விருந்தோம்பல் பண்பினைக் காண முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. இரா. இளங்குமரனார், பாணர், ப.48.
2. மேலது, மு.நூ., ப.48.
3. கே. பழனிவேலு, சங்க இலக்கியம் பாட்டு மரபும் எழுத்து மரபும், ப.48-49.
4. இரா. இளங்குமரனார், மு.நூ., ப.82.

**துணைநூற்பட்டியல்**

1. இளங்குமரன், இரா. பாணர். சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1998.
2. சாமிநாதையர், உ. வே. பத்துப்பாட்டு: மூலமும் உரையும். சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1967.
3. கைலாசபதி, கா. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2006.